

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

மூன்றாம்பத்து

______________

4-ஆம் திருமொழி - தழைகளும்

_______*________

* தழைகளும்தொங்கலும்ததும்பிஎங்கும்
            தண்ணுமைஎக்கம்மத்தளிதாழ்பீலி *
குழல்களும்கீதமுமாகிஎங்கும்
            கோவிந்தன்வருகின்றகூட்டம்கண்டு *
மழைகொலோவருகின்றதென்றுசொல்லி
            மங்கைமார்சாலகவாசல்பற்றி *
நுழைவனர்நிற்பனராகி எங்கும்
            உள்ளம்விட்டுஊண்மறந்தொழிந்தனரே. (1)

வல்லிநுண்இதழன்னஆடைகொண்டு
            வசையறத்திருவரைவிரித்துடுத்து *
பல்லிநுண்பற்றாகஉடைவாள்சாத்திப்
            பணைக்கச்சுந்திப்பலதழைநடுவே *
முல்லைநல்நறுமலர்வேங்கைமலரணிந்து
            பல்லாயர்குழாம்நடுவே *
எல்லியம்போதாகப்பிள்ளைவரும்
            எதிர்நின்றுஅங்கினவளைஇழவேன்மினே. (2)

கரிகையும்தெறிவில்லும்செண்டுகோலும்
            மேலாடையும்தோழன்மார்கொண்டோட *
ஒருகையால்ஒருவந்தந்தோளையூன்றி
            ஆநிதையினம்மீளக்குறித்தசங்கம் *
வருகையில்வாடியபிள்ளைகண்ணன்
            மஞ்சளும்மேனியும்வடிவும்கண்டாள் *
அருகேநின்றாள்என்பெண்நோக்கிக்கண்டாள்
            அதுகண்டுஇவ்வூர்ஒன்றுபுணர்க்கின்றதே. (3)

குன்றெடுத்துஆநிரைகாத்தபிரான்
            கோவலனாய்க்குழலூதியூதி *
கன்றுகள்மேய்த்துத்தந்தோழரோடு
            கலந்துடன்வருவானைத்தெருவில்கண்டு *
என்றும்இவனையொப்பாரைநங்காய்!

கண்டறியேன்ஏடி! வந்துகாணாய் *
ஒன்றும்நில்லாவளைகழன்று
துகிலேந்திளமுலையும்என்வசமல்லவே. (4)

சுற்றிநின்றுஆயர்தழைகளிடச்
சுருள்பங்கிநேத்திரத்தால்அணிந்து *
பற்றிநின்றுஆயர்கடைத்தலையே
பாடவும்ஆடக்கண்டேன் * அன்றிப்பின்
மற்றொருவர்க்குஎன்னைப்பேசலொட்டேன்
மாலிருஞ்சோசோலைஎம்மாயற்கல்லால் *
கொற்றவனுக்குஇவளாமென்றெண்ணிக்
கொடுமின்கள்கொடீராகில்கோழம்பமே. (5)

சிந்துரமிலங்கத்தந்திருநெற்றிமேல்
திருத்தியகோறம்பும்திருக்குழலும் *
அந்தரமுழவத்தண்தழைக்காவின்கீழ்
வருமாயரோடுஉடன்வளைகோல்வீச *
அந்தமொன்றில்லாத்ஆயப்பிள்ளை
அறிந்தறிந்துஇவ்வீதிபோதுமாகில் *
பந்துகொண்டானென்றுவளைத்துவைத்துப்
பவளவாய்புறுவலும்காண்போம்தோழீ! (6)

சாலப்பல்நிரைப்பின்னேதழைக்காவின்கீழ்த்
தந்திருமேனிநின்றொளிநிகழ *
நீலநல்நறுங்குஞ்சிநேத்திரத்தாலணிந்து
பல்லாயர்குழாம்நடுவே *
கோலச்செந்தாமரைக்கண்மிளிரக்
குழலூதியிசைபாடிக்குனித்து * ஆயரோடு
ஆலித்துவருகின்றஆயப்பிள்ளை
அழகுகண்டுஎன்மகளயர்க்கின்றதே. (7)

சிந்துரப்பொடிக்கொண்டுசென்னியப்பித்
திருநாமமிட்டங்கோரிலையந்தன்னால் *
அந்தரமின்றித்தன்னெறிபங்கியை
அழகியநேத்திரத்தாலணிந்து *
இந்திரன்போல்வருமாயப்பிள்ளை
எதிர்நின்றங்கினவளைஇழவேலென்ன *
சந்தியில்நின்றுகண்டீர் நங்கைதன்
துகிலொடுசரிவளைகழல்கின்றதே. (8)

வலங்காதின்மேல்தோன்றிப்பூவணிந்து
மல்லிகைவனமாலைமௌவல்மாலை *
சிலிங்காரத்தால்குழல்தாழவிட்டுத்
தீங்குழல்வாய்மடுத்தூதியூதி *
அலங்காரத்தால்வருமாயப்பிள்ளை
அழகுகண்டுஎன்மகள் ஆசைப்பட்டு *
விலங்கிநில்லாதுஎதிர்நின்றுகண்டீர்
வெள்வளைகழன்றுமெய்ம்மெலிகின்றதே. (9)

* விண்ணின்மீதுஅமரர்கள்விரும்பித்தொழ
மிறைத்துஆயர்பாடியில்வீதியூடே *

கண்ணன்காலிப்பின்னேஎழுந்தருளக்கண்டு
இளவாய்க்கன்னிமார்காமுற்ற
வண்ணம் * வண்டமர்பொழில்புதுவையர்கோன்
விட்டுசித்தன்சொன்னமாலைபத்தும் *
பண்ணின்பம்வரப்பாடும்பத்தருள்ளார்
பரமானவைகுந்தம்நண்ணுவரே. (10)

அடிவரவு : தழைகளும் வல்லி கரிகை குன்று சுற்றி சிந்துரம் சால சிந்துரப்பொடி வலம் விண்ணின்மீது அட்டு.